


ராமுவுக்கு ஒரே ஒரு ஆசை தான். ஒரு பெரிய ஆசை. ஒரு ரகசிய ஆசை.

நினைத்தாலே அவன் மனசு பறந்தது!
ஒரு சைக்கிள்... முகத்தில காற்று...
வேகம்... வேகமா நான் பறப்பேன்...

காகத்து போல!




ராமு ஒரு டீக்கடையில் வேலை செய்தான்.

அதற்கு பக்கத்தில் சைக்கிள் மாமாவின் கடை – ராமுவின் மேஜிக் உலகம்.

அங்கே நிற்கும் ஒவ்வொரு சைக்கிளும் ஒரு கனவு!

மாமா கரகரப்பாக சொன்னார், "ஏய்! இப்படி பார்த்தா? என் சைக்கிளையே விழுங்கிடுவ!"



ஆனால், அவர் மனசு வெண்ணெய்.





சின்ன சைக்கிள்!

பெரிய சைக்கிள்!

கூடை சைக்கிள்!

பிங்க் பூ வரைந்த சைக்கிள்...





அவன் மனம் அலைபாயும்.



ராமு அலைகளைப்
பார்ப்பான் – கண்
நிறைய ஆசை.